**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM**
**EP.178/2019**

சாட்சி : RW–1

பெயர் : ராஜ்குமார் தேதி: 12.03.2025

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

நான் தற்போது பெங்களூரில் உள்ள எனது மகள் வீட்டில் குடியிருக்கிறேன். என்னுடன் தான் என் மனைவியும் இருக்கிறார். நான் மனுதாரர் பைனாஸ்சில் கடன் வாங்கியிருக்கிறேன். கடன் நிலுவை தொகை செலுத்தவேண்டியுள்ளது என்பது எனக்கு தெரியும் என்று சொன்னால் ஆமாம். இந்த நீதிமன்றம் வந்தபின்பு தெரியும். கடன்தொகை முழுவதும் நான் செலுத்தவில்லை. வண்டியை மனுதாரர் நிறுவனத்தார் எடுத்துசென்றுவிட்டார்கள்.

கடன் நிலுவை தொகை உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எவ்வளவு நிலுவை தொகை உள்ளது என்று நான் மனுதாரர் நிறுவனத்தை அனுகி தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எனக்கு இதயநோய் உள்ளது. மனுதாரர் நிறுவனத்திற்கு சென்று எனக்கு உடல்நிலை சரியில்லை என்றும், எனது தொழில் நஷ்டமடைந்துவிட்டது என்றும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக கடன் வாங்கினால் அதில் நிலுவை தொகை உள்ளது என்பதை நாம் தான் தெரிந்துகொள்ள வேண்டும் என்றால் சரிதான்.

2013 இல் எனக்கு இசைவு தீர்ப்பாயத்திலிருந்து அறிவிப்பு வந்தது என்றால் சரியல்ல. எனக்கு 2013 இல் மனுதாரிடம் இருந்தும் இசைவு தீர்ப்பாயித்திருந்தும் அறிவிப்பு வந்தது என்றும் அதை நான் பெற்றுள்னேன் என்றால் சரியல்ல. நான் கடன் திரும்ப கொடுக்க வசதி இல்லை என்று நொடியவர் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது பற்றிய விவரம் தெரியாது. இந்த வழக்கை நான் வழக்கறிஞர் வைத்து நடத்துகிறேன் என்றால் ஆமாம். இலவச வழக்கறிஞர்

நான் வழக்கை நடத்தவில்லை. வாங்கிய கடனை செலுத்தும் வசதி எனக்கு உள்ளது என்றும், மனுதாரரை நோக்கும் நோக்கத்தில் எனக்கு வசதி இல்லை என்று பொய் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இதய நோய் உள்ளது. தொழில் நஷ்டமடைந்துவிட்டது. எனது தொழில் 15 வருடத்திற்கு முன்பே நஷ்டமடைந்துவிட்டது.

நான் கடந்த 4 ஆண்டுகளாக என் மகள் வீட்டில் வசிக்கிறேன். நான் கடன் எந்த வருடம் வாங்கினேன் என்று நினைவில்லை. 21.02.2009 இல் நான் கடன் வாங்கினேன் என்றால் அது எனக்கு நினைவில்லை. நான் மனுதாரரைஏமாற்றும் நோக்கத்தில் நஷ்டடைந்துவிட்டது என்று சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. மனுப்படி நான் மனுதாரருக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/– L. Kalaivani,

III Additional District Judge,

Salem.